TAMIL / TAMIL

**கொரோனா வைரஸ் (COVID-19)**
**பணி நிலையங்களில் COVID-19 வைரஸை தடுத்தல்: தொழில்தருநர்கள், ஊழியர்கள் மற்றும் அத்தியாவசிய சேவையில் ஈடுபடும் பணியாளர்கள் ஆகியோருக்கான ஆலோசனை**

COVID-19 வைரஸ் பரவுவதைத் தடுப்பதற்கு நாம் கனடா முழுதிலும் அதிவிஷேட நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம். சில பணி நிலையங்களுக்கு இது அவற்றில் மாற்றத்தை ஏற்படுத்துவதை அல்லது அவற்றின் வழமையான அலுவலக நேரங்களை மட்டுப்படுத்துவதை அல்லது குறிப்பிட்டவொரு காலப் பகுதிற்கு அத்தகைய பணி நிலையங்களை மூடுவதை கருதலாம். இந்த நோய் பரவும் இந்தக் காலத்தில், வீடுகளிலே இருக்குமாறு பல ஊழியர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது, மற்றும் சிலர் வீடுகளிலிருந்தவாறு பணியாற்றுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர், மேலும் சிலர் கனடாவின் அலுவலகத் தொழிற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு அத்தியாவசியமான தொழில்களை புரிகின்றவர்கள் என்பதால் தொடர்ந்தும் வேலைக்குச்செல்லுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

அத்தியாவசிய பணியாளர்கள் உயிர்களைப் பாதுகாப்பதற்கும், சுகாதார மற்றும் அடிப்படை சமூகப் பணிகளை மேற்கொள்வதற்கும் மிக முக்கியமானவர்கள் எனக் கருதப்படுகின்றனர். இவ்வாறிருந்தாலும், முதலாவது பொறுப்புக்கூறுபவர்கள், சுகாதாரப் பராமரிப்புப் பணியாளர்கள், நீர்வலு மற்றும் எரிவாயு போன்ற முக்கியமான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கும் பணியாளர்கள், உணவு மற்றும் மருந்துகள் போன்ற மிக அத்தியாவசிய பொருட்களை மக்களுக்கு விநியோகிக்கும் அத்தியாவசிய சேவைகளில் ஈடுபடும் பணியாளர்கள் என்ற மட்டுப்பாடுகள் இதற்கு கிடையாது.

சகல ஊழியர்களும் தமது தனியாள் வாழ்க்கையில் தொடுகையின்றி தள்ளிநிற்க வேண்டிய தூரத்தையும் மற்றும் சுகாதாரப் பழக்கவழக்கங்களையும் தொடர்ந்தும் கடைப்பிடிக்க வேண்டும். அத்தியாவசியமான சேவைகளை வழங்குகின்ற முக்கியமான சேவை நிலையங்களையும் அவற்றின் ஊழியர்களையும் பாதுகாப்பதற்கு மேலதிகமான நடவடிக்கைகளையும் நாம் மேற்கொள்ள வேண்டும். தொழில்தருநர்களும் மற்றும் ஊழியர்களும் அவர்களினதும் மற்றும் அவர்களின் வாடிக்கையாளர்களினதும் சுகாதாரத்தைப் பாதுகாப்பதையும் மற்றும் சேவை வழங்கும் அத்தகைய நிலையங்கள் அத்தியாவசிய சேவைகளை விநியோகிப்பதையும் உறுதிசெய்யும் வகையில் ஒன்றிணைந்து தொழிற்படுவது அவசியமாகும்.

**தொழில்தருநர்கள், இந்த COVID-19 வைரஸ் கொள்ளைநோய் தொற்றியிருக்கின்ற இந்த காலகட்டத்தில், பணி நிலையங்களுக்கான/வியாபார நிலையங்களுக்கான ஆபத்து அறிவிப்பு தொடர்பான தீர்மானமெடுத்தல் பற்றிய வழிகாட்டல்களை பின்பற்ற வேண்டும்.**

## சகல ஊழியர்களுக்கும்

சகல ஊழியர்களும் அவர்களின் பணி நிலையங்களில் இந்த வைரஸ் தொற்றுவதைத் தடுப்பது தொடர்பான கொள்கைகளையும் மற்றும் செயன்முறைகளையும் புரிந்துகொண்டு அவற்றைப் பின்பற்றி நடப்பதை உறுதிசெய்தல் வேண்டும்:

**உங்களின் கைகளைக் கழுவிச்சுத்தமாக வைத்திருத்தல்:**

- சவர்க்காரத்தையும் நீரையும் உபயோகித்து உங்களின் கைகளை அடிக்கடி குறைந்தது 20 செக்கன் வரையாவது நன்றாகக் கழுவிக்கொள்ளல்
- சவர்க்காரமும் நீரும் கிடையாத சந்தர்ப்பத்தில், கைகளைக் கழுவித் தொற்றுநீக்கக்கூடிய மதுசார காரமான கரைசல்களையும் பதார்த்தங்களையும் உபயோகித்து கைகளை நன்றாகக் கழுவி சுத்தமாக வைத்துக்கொள்ளல்
- கண், மூக்கு மற்றும் வாய் முதலியவற்றை தொடுவதைத் தவிர்த்துக்கொள்ளல்
- முழங்கையால் மறைத்து தும்முதல் அல்லது இருமுதல்
- நபர்கள் அடிக்கடி தொடும் மேற்பரப்புகளைத் தொடுவதிலிருந்து தவிர்ந்துகொள்ளல்
- கைகுலுக்கலுக்கு பதிலாக நட்புநேய வணக்கம் கூறி அல்லது மரியாதை செய்து வரவேற்றல்
- பணிக்கப்படுகின்றவாறு தேவையான தனியாள் பாதுகாப்பு உபகரணங்களைப் பாவித்தல்

**உங்களின் சுற்றாடலை சுத்தமாக வைத்திருத்தல்:**

- உங்களின் மேசை, பணி நிலைய மேற்பரப்பு, சாவிப் பலகைகள், இலத்திரனியல் உபகரணங்கள், காசுப் பதிவேட்டுக் கருவிகள், சாவித்திண்டுகள், மின்தூக்கிப் பொத்தான்கள் மற்றும் சிற்றுண்டி மேசைகள் போன்றவற்றை, அவை அழுக்காதத் தென்பட்டால், தொற்றுநீக்கி சுத்தம் செய்வதற்கு பொருத்தமான தொற்றுநீக்கிப் பொருட்களை உபயோகித்து நாளாந்தம் மிகவும் அடிக்கடி, குறைந்தபட்சம் இரண்டு தடவைகளாவது சுத்தம்செய்துகொள்ளல்.
- தொற்றுநீக்குவதற்கு பயன்படும் திரவங்களைப் பாவித்தாலும் தொலைபேசிகள், கணனிகள் மற்றும் ஏனைய உபகரணங்கள் போன்ற அடிக்கடி தொடும் இலத்திரனியல் உபகரணங்களில் கிருமிகள் மேலும் அழியாது நிலைத்திருக்கக்கூடும் என்பதால், அத்தகைய இலத்திரனயில் உபகரணங்களை 70% மதுசார காரமான (உ-ம்: மதுசார ட்ரெப் துடைப்பான்கள்) பதார்த்தங்களைப் பாவித்து தொற்றுநீக்கிக்கொள்வது சிறந்ததாகும்.

**தொடுகையின்றி தள்ளிநிற்க வேண்டிய தூரத்தைப் பேணுதல்:**

- உங்களுடன் வேலைசெய்யும் பணியாளர்கள் மற்றும் வாடிக்கையாளர்கள் ஆகியோருக்கு இடையில் குறைந்தபட்சம் 2 மீற்றர் தூரத்தையேனும் பேணுதல்.
- மேசைகள், கதிரைகள் மற்றும் பணி நிலையங்கள் என்பவற்றுக்கு இடையில் தொடுகையின்றிய தள்ளிநிற்க வேண்டிய தூரத்தை அதிகம் அதிகமாகப் பேணிக்கொள்ளல்.
- குழுக் கூட்டங்கள் போன்ற ஆள் ரீதியில் மிகவும் நெருங்கியிருப்பதை அல்லது தொடர்புகொள்வதை தேவைப்படுத்தும் செயற்பாடுகளைக் குறைத்துக்கொள்ளல்.
- இயலுமான வரையில் 2 மீற்றர்களுக்கு மிகவும் நெருங்கிய தூரத்தில் தொடர்புகொள்வதை குறுகிய நேரத்திற்கு மட்டுப்படுத்திக்கொள்ளல்.

**உங்களுக்கு COVID-19 வைரஸ் அறிகுறிகள் இருந்தால்:**

- COVID-19 வைரஸ் உங்களுக்கு தொற்றியிருக்கலாம் என நினைத்தால், என்ன செய்ய வேண்டும் என்பதைக் கண்டறிந்துகொள்வதற்கு எமது சுய மதிப்பீட்டு சாதனத்தை பயன்படுத்தல்.
- COVID-19 வைரஸின் ஒரு அறிகுறியாவது (காய்ச்சல், இருமல் அல்லது மூச்செடுத்து விடுவதற்கு கடினமாக இருத்தல்) இருந்தால் அல்லது அந்த அறிகுறிகள் சற்றளவேனும் தென்பட்டால், மிகவும் ஆபத்தாக இருக்கும் என்பதால், அந்த நோய் மற்றவர்களுக்கு பரவுவதைத் தவிர்க்கும் வகையில், வெளியே செல்லாமல் வீடுகளிலேயே தனிமைப்படுத்திக்கொண்டு இருத்தல்.
- நீங்கள் உங்களுடைய பணி நிலையத்தில் இருக்கும் போது சற்றேனும் இந்த வைரஸ் நோய் அறிகுறிகள் இருப்பதாக உணர்ந்தால், மற்றவர்களிலிருந்து நீங்கள் தானாகவே பிரிந்து வீடுகளுக்குச்செல்லல், சாத்தியமாயின், பொதுப் போக்குவரத்து வாகனங்களில் (உ-ம்: பேரூந்துகள், புகையிரதம், டெக்ஸிகள்) செல்வதைதத் தவிர்த்துக்கொள்ளல்.
- உங்களின் உள்ளூர் பொது சுகாதார அதிகாரியை நாடி அவர்கள் வழங்கும் அறிவுரைகளைப் பின்பற்றுதல்.
- இந்த நிலையில், நீங்கள் நிதி நெருக்கடியில் இருப்பீர்களாயின், கனடா அரசாங்கம் உங்களுக்கு உதவிகளை வழங்கும்.

- நீங்கள் கனடாவுக்கு வெளியால் ஏதாவது பயணத்தை மேற்கொண்டு நாடு திரும்பும் வேளையில் 14 நாட்களுக்கு தன்னைத்தானே தனிமைப்படுத்திக்கொள்ளல்.
- நீங்கள் கனடாவுக்குள்ளே பயணத்தை மேற்கொண்டு திரும்பும் வேளையில் இருமல், காய்ச்சல் அல்லது மூச்செடுத்து விடுவதற்கு கடினமாக இருத்தல் போன்ற நோய் அறிகுறிகள் இருக்கின்றனவா என அறிந்துகொள்வதற்கு நீங்கள் 14 நாட்களுக்கு உங்களை தன்னைத்தானே கண்காணித்துக்கொள்ளல்.
- இருமல், காய்ச்சல் அல்லது மூச்செடுத்து விடுவதற்கு கடினமாக இருத்தல் போன்ற சற்றளவேனும் நோய் அறிகுறிகள், தென்பட்டால், வெளியே செல்லாது வீட்டிலே தன்னைத்தானே தனிமைப்படுத்திக்கொண்டு மேலதிக அறிவுரைகளுக்காக உங்களின் பொது சுகாதார அதிகாரியின் உதவியை நாடுகள்.

## அத்தியாவசிய பணியாளர்களுக்கான பணி சம்பந்தமான பயணம்

- ட்ரக் வண்டி சாரதிகள், புகையிரத சாரதிகள் அல்லது விமானமோட்டிகள் போன்ற அத்தியாவசியப் போக்குவரத்துப் பணியாளர்கள் நாட்டின் தொடர்ச்சியான அலுவலகத் தொழிற்பாடுகள் மற்றும் இந்த COVID-19 வைரஸுக்கான பதிலீட்டு நடவடிக்கையின் நிமித்தம் அவசியமான மருந்துப் பொருட்களையும் ஏனைய அத்தியாவசியப் பொருட்களையும் எடுத்துவருதல் ஆகியவற்றை உறுதிசெய்யும் பொருட்டு பயணிக்குமாறு தேவைப்படுத்தப்படுகின்றனர்.
- அத்தியாவசிய சேவைகளில் ஈடுபடும் பணியாளர்கள், பணி சம்பந்தமான பயணத்தின் பின்னர் 14 நாட்களுக்கு தன்னைத்தானே தனிமைப்படுத்திற்கொள்ள வேண்டிய அவசியமில்லை, ஆயினும் இந்த வைரஸ் நோய் அறிகுறிகள் தென்படுகின்றனவா என நெருங்கி தன்னைத்தானே கண்காணித்துக்கொள்வதற்கும், மற்றும் அத்தகைய நோய் அறிகுறிகள் சற்றளவேனும் தென்பட்டால், உடனடியாக தன்னைத்தானே தனிமைப்படுத்திக்கொள்வதற்கும் தேவைப்படுத்தப்படுவார்கள்.

COVID-19 வைரஸ் பரவுவதைத் தடுப்பதற்கு எமது சார்பாக செய்ய வேண்டிய எல்லாவற்றையும் எம்மால் செய்ய முடியும்.

மேலதிக தகவல்களுக்கு Canada.ca/coronavirus இணையத்தள வசதிற்கு பிரவேசிக்கவும் அல்லது 1-833-784-4397 என்ற தொலைபேசி எண்ணினூடாக தொடர்புகொள்ளவும்.